DISTRICT SECRETARIAT,
JAFFNA

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු ආයතන භාර අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම

பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்

Submission of observations of Hon.Minister and steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of standing order No.119(4)

நிலையியற் கட்டளை இல 119(4) இன் கீழ் அரச கணக்குகள் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

பாராளுமன்ற கூட்டத் தொடர் இலக்கம் - 79
நிறுவனத்தின் பெயர் - மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

<table>
<tr><th>இல</th><th>அரச கணக்குகள் குழுவினால் அடையாளங் காணப்பட்ட குறைபாடுகள்</th><th>அடையாளங்காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நிறுவனத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் / தற்போதையநிலை</th></tr>
<tr><td>01</td><td>2024.05.11 ந் திகதிய அரச கணக்கு சுற்றறிக்கை இல 171/2024 இன்படி, மென்பொருள் அமைப்பின் முதல், இரண்டாவது, மற்றும் மூன்றாவது கடவுச்சொற்கள் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை மாற்றப்படவில்லை.</td><td>மென்பொருள் பொதியில் கடவுச் சொற்களை மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td>02</td><td>அனைத்து குழாம் வாகனங்களுக்கும் அரச சின்னமானது வர்ணம் பூசப்பட்டிருக்கவில்லை</td><td>அனைத்து குழாம் வாகனங்களிலும் அரச சின்ன வர்ணம் பூசுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td>03</td><td>அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக இணைக்கப்பட்டவர்களைத் தவிர அங்கீகரிக்கப்பட்ட ஆளணிக்கு மேலதிகமான பணியாளர்கள் இணைக்கப்பட்டுள்ளனர்</td><td><table>
<tr><th></th><th>அலுவலர்களின் வகை</th><th>மேலதிகம்</th></tr>
<tr><td></td><td></td><td></td></tr>
<tr><td>1</td><td>சிரேஷ்ட நிலை</td><td>-</td></tr>
<tr><td>2</td><td>3ம் நிலை</td><td>02</td></tr>
<tr><td>3</td><td>2ம் நிலை</td><td></td></tr>
<tr><td>4</td><td>1ம் நிலை</td><td>04</td></tr>
<tr><td></td><td>மொத்தம்</td><td>06</td></tr>
</table>
<u>3ம் நிலை - 02</u>
ICTO – பிரதேச செயலகங்களில் இதற்கான ஆளணி இல்லை. எனினும் சீர் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

1ம் <u>நிலை</u> - 04
அனுமதிக்கப்பட்ட ஆளணி அட்டவணையில் அலுவலக சிற்றூழியர் ஆக அமைச்சினால் அனுமதி வழங்கப் பட்டிருந்தது. ஆயினும் நியமனக் கடிதம் இதுவரை வழங்கப்படவில்லை.</td></tr>
<tr><td>04</td><td>மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் மாதந்தோறும் நடாத்தப்படவில்லை.</td><td>2022 ஆம் ஆண்டில் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவர் நியமிக்கப்படவில்லை. அதன் காரணமாக கூட்டங்கள் நடாத்த முடியவில்லை.</td></tr>
<tr><td>05</td><td>1946 ஆம் ஆண்டின் 32ம் இலக்க நீர்ப்பாசன கட்டளைச் சட்டத்தின்படி மாவட்ட விவசாய குழுக் கூட்டங்கள் நடாத்தப்படவில்லை</td><td>சில கூட்டங்கள் எங்களால் நடாத்தப்பட்டன. எனினும் 2022ம் ஆண்டில் கூட்டமானது நிதி நெருக்கடி காரணமாக கட்டளைச் சட்டத்திற்கேற்ப நடாத்த முடியவில்லை. எவ்வாறாயினும் எதிர்வரும் காலங்களில் இத்தகைய கூட்டங்களை நடாத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.</td></tr>
</table>

06	மாவட்ட குடிமனை தொடர்பான குழுவானது மாதந்தோறும் கூட்டப்படவில்லை.	எங்களால் கூட்டங்கள் நடாத்தப்பட்ட போதும் அவற்றிற்கான கூட்ட அறிக்கையினை ஆவணப்படுத்த முடியவில்லை. எவ்வாறாயினும் எதிர்காலத்தில் மாதந்தோறும் கூட்டத்தினை ஒழுங்காக நடாத்தி கூட்ட அறிக்கையினை ஆவணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
07	மாதந்தோறும் மாவட்ட உர ஒருங்கிணைப்புக் குழு கூட்டப்படவில்லை.	இத்தகைய கூட்டங்களை மாதாந்தம் நடாத்துவதற்கு பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் இதுவரை நியமிக்கப்படவில்லை. எவ்வாறாயினும் உரம் தொடர்பான விடயங்கள் மாவட்ட செயலகத்தால் கூட்டப்படும் கூட்டங்களில் கலந்தாலோசிக்கப்பட்டது.
08	மாவட்ட விலை ஒழுங்குமுறைக் குழு கூட்டங்கள் மாதந்தோறும் நடாத்தப்படவில்லை.	சில கூட்டங்கள் எங்களால் நடாத்தப்பட்டது. எனினும் விலைகளில் தொடர்ச்சியாக மாற்றம் இல்லாத காரணத்தால் மேலதிக கூட்டங்கள் நடாத்துவதற்கான தேவைப்பாடு இல்லை.
09	நிறுவனத்தின் கணக்குகள் பற்றி முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம்	கணக்காய்வாளர் அதிபதியினால் சுட்டிக்காட்டப்பட்ட பெரும்பாலான பிரச்சினைகள் சீர் செய்யப்பட்டுள்ளதுடன் ஏனையவற்றை சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
10	கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வெளியிடப்பட்ட விதப்புரைகள் செயற்படுத்தப்படவில்லை.	கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வெளியிடப்பட்ட பெரும்பாலான விதப்புரைகள் செயற்படுத்தப்பட்டிருந்ததோடு மற்றைய விதப்புரைகளை செயற்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
11	அனைத்து அரச உத்தியோகத்தர்களும் தமது சொத்துக்கள், பொறுப்புக்கள் தொடர்பான விபரங்களை சமர்ப்பிக்கவில்லை	பெரும்பாலான உத்தியோகத்தர்களிடமிருந்து சொத்துக்கள், பொறுப்புக்கள் தொடர்பான விபரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளதுடன் அனைத்து உத்தியோகர்களிடமிருந்தும் விபரங்களை சேகரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
12	ஆகக் கூடிய சேவைக் காலத்தை பூர்த்தி செய்த அலுவலர்களுக்கு உரிய முறையில் இடமாற்றம் வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	தற்போது ஆகக் கூடிய சேவைக் காலத்தை பூர்த்தி செய்த உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது,
13	மாவட்ட சுற்றுச் சூழல் குழு கூட்டமானது இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை கூட்டப்படவில்லை.	எதிர்காலத்தில் இரண்டு மாதங்களிற்கு ஒருமுறை கூட்டத்தினை ஒழுங்காக நடாத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

என்.எஸ்.ஆர்.சிவரூபன்,
பிரதம கணக்காளர்,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்

என்.எஸ்.ஆர் சிவரூபன்
பிரதம கணக்காளர்,
அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளருக்காக
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

ம.பிரதீபன்,
மாவட்டசெயலாளர்/அரசாங்க அதிபர் (பதில்)
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்

ம.பிரதீபன்
அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர்(பதில்)
யாழ்ப்பாண மாவட்டம்

செயலாளரின் பரிந்துரை

மாவட்ட செயலாளரினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதுடன் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளுக்கு தனிப்பட்ட கவனம் செலுத்தி அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு மாவட்ட செயலாளரிக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.

Pradeep Yasarathna
Secretary
Ministry of Public Administration, Home Affairs,
Provincial Councils & Local Government
(Home Affairs Division)
"NILA MEDURA" Elvitigala Mawatha, Colombo 05

பிரதீப் யசரத்ன

செயலாளர்

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

அமைச்சரின் பரிந்துரைகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

அரசாங்க கணக்குக்குழு மூலம் மாவட்ட செயலாளரிற்கு வழங்கப்பட்டிருக்கும் ஆலோசனைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி, அக்குறைபாடுகள் மீண்டும் ஏற்படாமல் இருக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க அமைச்சின் செயலாளரிற்கு நான் அறிவுறுத்தியுள்ளதுடன், அச்செயற்பாடுகள் மூலம் 2024 ஆம் ஆண்டிற்குள் அதன் அடைவு மட்டத்திலிருந்து உயர் மட்டத்தை எட்ட முடியும் என்று எதிர்பார்க்கின்றேன்.

கௌரவ தினேஸ் குணவர்தன (பா.உ.)

பிரதம அமைச்சர் மற்றும்

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்